**செய்தி வெளியீடு எண்:114** **நாள் : 21.02.2016**

## தமிழ் வளர்ச்சித் துறை

## உலகத் தாய்மொழி நாள்

யுனஸ்கோ நிறுவனத்தால் 1999–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21–ஆம் நாளை உலகத் தாய்மொழி நாள் என அறிவிக்கப்பட்டு, அதற்கிணங்க உலகெங்கிலும் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில், உலகின் மூத்த மொழியாகிய நம் தமிழ்மொழியைப் போற்றிடும் வகையில் உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21–ஆம் நாளன்று, தமிழ் மொழியின் சிறப்பை இனிவரும் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் எனும் உயரிய நோக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2013–2014 ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் போது **'உலகத் தாய்மொழி நாள்'** பிப்ரவரி 21–ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் கவியரங்கம், கருத்தரங்கம் நடத்திக் கொண்டாட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, தமிழ் வளர்ச்சித்துறையும் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கமும் இணைந்து **உலகத் தாய்மொழி நாள்** 2014 மற்றும் 2015 ஆகிய இரு ஆண்டுகள் சென்னையில் கொண்டாடப்பெற்றது. அதேபோன்று இவ்வாண்டும் உலகத் தாய்மொழி நாள் 21.02.2016 ஆம் நாளன்று சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சிய வளாகத்தில் அமைந்துள்ள அரங்கத்தில் காலை 10.30 மணிக்கு **'தமிழ் இனி உலகாளும்'** என்ற தலைப்பில் கவிஞர் பிறைசூடன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர் சிநேகன், கவிஞர் ஆதிரா முல்லை, கவிஞர் இராசாராமன், கவிஞர் கார்த்திகேயன், கவிஞர் சுமதிஸ்ரீ, கவிஞர் விநோதினி, கவிஞர் க. சங்கர் ஆகியோர் பங்கேற்று கவிபாடினர்.

அதனைத் தொடர்ந்து **'துறைதோறும் தமிழ் செய்வோம்'** என்ற தலைப்பில் முனைவர் கு. ஞானசம்பந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு.மரு.பாக்கம் தமிழன் (எ) பிரதாபசிம்மன் **'தமிழர் மருத்துவம்'** எனும் தலைப்பிலும், கவிஞர் மதிவண்ணன் **'தமிழும் பக்தி**

**இலக்கியமும்'** எனும் தலைப்பிலும், திரு. க. நாகப்பன் '**தமிழ் வளர்ச்சி**'எனும் தலைப்பிலும், செல்வி வெ. சரண்யா '**தமிழும் பெண்ணியமும்**'எனும் தலைப்பிலும் கருத்துரையாற்றினர்.

பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு. சேகர் அவர்கள் வரவேற்புரையும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றி தமிழ் வளர்ச்சித் துறையால் அச்சிடப்பட்ட இளந்தமிழர் இலக்கியப் பட்டறை மாணவர்கள் எழுதிய கவிதை நூலை வெளியிட பேராசிரியர் முனைவர் கு. ஞானசம்பந்தன் அவர்கள் முதல் படியை பெற்றுக் கொண்டு உரையாற்றினார். தொடர்ந்து அரசு செயலாளர் அவர்கள் மாநில அளவிலான கவிதை / கட்டுரை / பேச்சு ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்குப் பரிசுத் தொகையும் சான்றிதழும் இளந்தமிழர் இலக்கியப் பட்டறையில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன், மதுரை உலகத் தமிழ்ச் சங்கத் தனி அலுவலர் முனைவர் க.பசும்பொன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இளந்தமிழர் இலக்கியப் பட்டறை மாணவன் செல்வன் பி.அருண், செல்வி இ. வேதவள்ளி ஆகியோர் கருத்துரை வழங்கினர். தமிழ் வளர்ச்சி மண்டிலத் துணை இயக்குநர் திரு. க.கபிலர் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**